REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 5உ வியாழன் (17—2—55) ★ ★ வெளியூர்: மாசி 6உ வெள்ளி (18—2—55) [இதழ் 211

விலகுவது 'நாடக'மல்லவாம்!

பொது வாழ்வு கசந்துவிட்டதாம்!

சென்னை, பிப். 17—

இந்தியப் பேரரசின் தொழில், வர்த்தக இலாக்கா மந்திரி பதவியை தாம் இராஜினாமா செய்தது இறுதியானது தான் என்று திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

தாம் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகப்போவதில்லை என்றும், ஆனாலும் பொது வாழ்விலிருந்து விலகிக்கொள்வதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

உ. பி. காங்கிரஸ் 'ஆத்மார்த்த அரசியல்'!

பழைய 'பாண்டியாக்' விலை ரூ. 1,000

'போர்ட்' கார் விலை ரூ. 900

1946-ல் விற்கப்பட்டன! 1947-ல் விலை நிர்ணயிக்கப்பட்டன!

1949 வரையில் விற்பனைத் தொகைகளில் தாமதம்!

சம்பளம், படித் தொகையைப் பிடித்து கணக்கு நேராக்கப்பட்டது!

பார்லிமெண்ட் காரியதரிசிகள் பெற்ற சலுகை

காங்கிரஸ் ஆளவந்தார்களால்தான் நாட்டை நல்ல முறையில் ஆள முடியுமெனப் பீத்திக் கொள்ளப்படுகிறது. நேர்மை, நாணயம், கண்ணியம் அனைத்தும் அவர்களுக்குத்தான் 'காபிரைட்' என அங்கலாய்த்துக் கொள்ளுகின்றனர். ஆனால் நடைமுறைச் சம்பவங்களோ, அவை அனைத்தும் வெறும் பகட்டு, வாய்ப்பந்தல், பிறரை மயக்கும் பொய்யுரை என்பதை அம்பலமாக்கிய வண்ணம் உள்ளன.

உத்திரப் பிரதேசம், இந்தியத் துணைக்கண்டத்தை ஆட்டிப்படைக்கும் அரசியல் கேந்திரம்; எனவே, அங்குள்ள காங்கிரஸ் ஆளவந்தார்கள், மற்ற மாநில ஆளவந்தார்களுக்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டும் என்பது காங்கிரஸ் சித்தாந்தம். அம்முடிவுப்படி அவர்கள் வழிகாட்டிகளாகத்தான் இருந்திருக்கிறார்கள்; ஆனால் உயர் ஒழுக்கத்தில் அல்ல— இழிந்த ஒழுக்கக் கேட்டில்!

உத்திர பிரதேச காங்கிரஸ் அரசாங்கத்திடம் தேவைக்கதிகமான 'மோட்டார் கார்கள்' இருந்தன. அதை விற்றுவிடுவது என அமைச்சர் குழு தீர்மானித்தது.

1946 செப்டம்பர் மாதம், தங்கள் பார்லிமெண்டு காரியதரிசிகளுக்கு அவ்வதிகப்படியான 'கார்'களை விற்றுவிட்டது அரசாங்கம்; 'கார்'கள் விற்கப்பட்டன எனக் குறிப்பிடுவதைக் காட்டிலும், பார்லிமெண்டு காரியதரிசிகளிடம் 'கார்'கள் ஒப்படைக்கப்பட்டன என்பதே பொருந்தும்.

"மந்திரிகளால் உபயோகப்படுத்தப்பட்டு வந்த 7 மோட்டார் கார்கள், தேவைக்கு அதிகமானவைகள் என 1946-ல் முடிவு செய்யப்பட்டது. உடனே மேற்படி கார்கள் பார்லிமெண்டு காரியதரிசிகளிடம் ஒப்படைக்கப் பட்டன. இதன் மூலம் விற்பனை செய்துவிடப்பட்டதாகக் கருதப்பட்டது. ஆனால் உடனடியாக விலை நிர்ணயம் செய்யப்படவில்லை."

"தேவைக்கு அதிகமாக இருக்கும் மோட்டார்களை சாதாரணமாக பொது ஏலத்தில் விற்பது தான் வழக்கம். ஆனால், இங்கோ இவ்வழக்கம் கையாளப்படவில்லை. மேற்படி விற்பனையான கார்களுக்கு 1947 ஏப்ரல் மாதத்தில்தான் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. ஒரு 'பாண்டியாக்' கார் ரூ. 3,000-க்கும், மற்றொன்று ரூ. 1,000-க்கும் விற்கப்பட்டுள்ளன."

"ரூ. 1,000 விதம் இரண்டு 'போர்ட் கார்'கள் விற்கப்பட்டுள்ளன. மற்றொரு 'போர்ட் கார்' ரூ. 2,000-க்கு விற்கப்பட்டுள்ளது. நான்காவது காரோ ரூ. 900-க்கே விற்கப்பட்டிருக்கிறது. ஒரு 'செவர்லெட்' கார் ரூ. 2,000-க்கு விற்கப்பட்டிருக்கிறது."

"இவ்விலைகள் மிக மிகக் குறைவானவை. அப்படி இருந்தால் கூட மேற்படி மோட்டார்களை வாங்கினவர்கள் காலந் தவறாமல் அதன் தொகைகளைச் செலுத்தவில்லை. ஒருவர் விவகாரத்தில், அவருடைய சம்பளம், படி ஆகிய இரண்டையும் கட்டாயமாகப் பிடிப்பதின் மூலம் 1949 டிசம்பரில், அவரிடமிருந்து சேரவேண்டிய தொகை நேர்செய்யப்பட்டிருக்கிறது."

மேற்கூறிய அவலட்சண உண்மைகளை, 1951—52 உ. பி. அரசாங்கக் கணக்கை சோதித்துப் பார்த்த தணிக்கை அதிகாரிகளின் அறிக்கை அம்பலமாக்கியுள்ளது.

அது மேலும் கூறியுள்ளதாவது:

"அரசாங்க வரவு-செலவு ஏற்பாட்டில், இதுபோன்ற 19 ஒழுக்கீனங்கள் நடைபெற்றிருக்கின்றன; இதன் விளைவாக ரூ 4 லட்சம் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது."

வியாபாரம்செய்வதற்கென காஸ்டிக் சோடா, சோடா ஆஷ் உற்பத்திச் செய்வதற்காகத் தீட்டப்பட்ட குறைபாடு உடைய திட்டத்தின் விளைவாக ரூ. 43,000 நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும், அவ்வறிக்கை எடுத்துக்காட்டியுள்ளது.

அதுவுமன்றி, உணவுப் பங்கீடு அதிகாரிகள் அலட்சியத்தின் காரணமாக ரூ. 82,000 மதிப்புடைய உணவுப்பொருட்கள் சேதமடைந்துள்ளன என்றும், அதற்காக அவ்வதிகாரிகள் எச்சரிக்கப்பட்டு, நஷ்டத்தொகை தள்ளிவிடப்பட்டது என்றும் அறிக்கை விளக்கம் தந்துள்ளது.

உணவுப் பொருட்களை விலை கூட்டி விற்கவேண்டுமென 1948 ஆகஸ்ட் 17-ல் போட்ட உத்தரவை, ஒரு மாதம் வரை நடைமுறைக்குக் கொண்டுவராததால், ரூ. 22,000 அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தின் நிர்வாகக் கோளாறின் காரணமாக, நீர்ப்பாசனத் துறையிலும், தீர்வைத் துறையிலும் முறையே ரூ. 1,14,000-மும், ரூ. 52,000-மும் வசூலிக்கப்பட முடியாமல் நஷ்டமேற்பட்டுள்ளன.

'பொற் கால இந்தியா'வின் போலிப் பெருமை!

உலக மனித சமுதாயத்திற்கு இந்தியா தந்தது என்ன?

படையெடுப்பு வரலாறாக இருப்பானேன்?

சமூக முன்னேற்றம் சட்டத்தால் மட்டும் ஆகாது

'நமது சமூகப் பணியின் நோக்கம் குறித்து தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம்

"நம்மைத் தவிர, இந்த நாட்டில் உள்ள அரசியல் கட்சியினர், சமூக சீர்திருத்தம் பற்றிப் பேசுவதில்லை; அவர்கள், இந்தச் சமூகம் வேகமாக முன்னேறிவிட்டதாக நினைக்கிறார்கள்; நாம் மட்டும்தான், 'இந்தச் சமூகம் பின் தங்கிக் கிடக்கிறது; சீர்குலைந்து பாழ்பட்டுக் கிடக்கிறது,' என்று எண்ணி, சீர்குலைந்துள்ள சமூகத்தைச் சீர்திருத்த வேண்டும் என்று நினைக்கிறோம்;

"நமது சமூக சீர்திருத்தப் பணியின் நோக்கமெல்லாம், திராவிடர் சமுதாயம் தனக்கு வேண்டியன இன்னின்னவை, தன் வாழ்வு சிறப்புற இருக்கத் தேவையானவை என்ன என்பவற்றையெல்லாம் தெரிந்துகொண்டு, தன்னைத்தானே காலத்திற்கொப்ப திருத்தியமைத்துக்கொண்டு, முன்னேற முற்படுகிற ஒரு சூழ்நிலையை உருவாக்குவதுதான்;

"சிலர், அரசியல் அதிகாரமும், பொருளாதார வசதியும் இருந்துவிட்டாலே ஒரு சமூகம் முன்னேறிவிட்டதெனக்கொள்கிறார்கள்; மனித சமுதாயத்திற்குக் கிடைத்திருக்கிற வாய்ப்புகளில் அரசியல், பொருளியல் இரண்டும் முக்கியமானவைதான்;

"ஆனால், ஒரு சமுதாயத்தின் வாழ்வு இந்த இரண்டுடன் முற்றுப் பெற்றுவிடவில்லை என்பதை அவர்கள் உணர வேண்டும்.

"நம் சமுதாயம் பின்தங்கிக் கிடக்கிறது—சீர்குலைந்திருக்கிறது என்பதற்கு, இந்த நாட்டின்—இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறே நல்ல சான்றாகும்;

"இந்தியாவின் வரலாற்றைப்புரட்டினால்—கணவாய்கள் வழியாக செங்கிஸ்கான் வந்தான்; அலெக்சாண்டர் வந்தான்; கோரி வந்தான்; கஜினி வந்தான்; பின்பு போர்த்துகீசியர் வந்தார்கள்; அதன் பின் டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள் வந்தார்கள்; அதன் பிறகு வெள்ளைக்காரர்கள் வந்தார்கள்—என்று சரித்திரச் சம்பவங்கள், வெளிநாட்டிலிருந்து இந்த நாட்டிற்கு வந்தார்கள்—என்றே கூறுகின்றன;

"இந்தச் சமுதாயம் முன்னேறிய சமுதாயமாயிருந்திருந்தால் —சீர்திருத்தப்பட வேண்டாத சமுதாயமாயிருந்தால், அன்னியரின் படையெடுப்புகள் ஒன்றன் பின் ஒன்றாய் அடுக்கடுக்காய் வளர்ந்துகொண்டே இருந்திருக்குமா?

"இந்தப் படையெடுப்புகளுக்குக் காரணமெல்லாம், இங்கு வாழ்ந்துகொண்டிருந்த மக்களுக்கு நாட்டுப்பற்று இல்லாதிருந்ததும், அந்த நாட்டுப்பற்று இருப்பதற்குத் தேவையாயிருக்கிற 'வாழ வேண்டும்' என்ற எண்ணம் அவர்களிடை இல்லாமற்போனதும்தானே?

"ஒரு வீடு இருக்கிறது; அந்த வீட்டில், பெருச்சாளிகள், அடுத்தடுத்து குழி பறித்து வீட்டை நாசப்படுத்துகின்றன என்றால், அந்த வீட்டின் தள வரிசை சரியாக, உறுதியாக அமையப்பெறவில்லை—கலகலத்துவிட்டது என்பதுதானே பொருள்?

"அதேபோலத்தான், இந்நாட்டு மக்கள், 'வாழ வேண்டும்—அதுவும் அடிமையாகாமல் வாழ வேண்டும்' என்ற எண்ணமும் உறுதியும் இல்லாதவர்களாக இருந்ததின் விளைவுதான், இந்த நாட்டுச் சரித்திரத்தில், 'வந்தார்கள்—படையெடுத்துவந்து அடிமையாக்கினார்கள்,' என்றே இருக்கிறது;

"படையெடுப்புகளை வரவேற்றார்கள் என்பது மட்டுமல்ல; வரவேற்றதற்குக் காரணம், வலுவின்மையாகவும் இருந்திருக்கலாம்; வந்தவர்களுடன் கூட்டுச் சேர்ந்து சொந்த நாட்டவரை

(4-ம் பக்கம் பார்க்க.)

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

சென்னை 17—2—1955 வியாழன்

கர்மம் தொலையவில்லை!

'காசிக்குப் போனல் கர்மம் தொலையும்' என்பார்கள் வைதிகர்கள். ஆனல், காசிக்குப் போனவர்களின் பணம் தொலைந்து விட்டதைத்தான் நாம் அனுபவத்தில் காண்கிருேமேயல்லாது, கர்மம் தொலைத்து வந்தவர்களை நாம் இதுவரை கண்டதுமில்லை; கேட்டதுமில்லை.

லியாகத் அலிகான் சுட்டுக் கொல்லப்பட்டதற்குப் பிறகு, பாகிஸ்தான் அரசியலில் நிச்சயமற்ற நிலை இடம் பெற்றுவிட்டது. அதிர்ச்சி தரும் எதிர்பாரா சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்ருக ஏற்பட்டவண்ணம் உள்ளன. திடீர் மாற்றங்கள் தடுக்கப்பட்டு, ஒரு நிலையான ஆட்சி அங்கு ஏற்படுவது எப்பொழுது என்பதை வரையறுத்துக் கூறுவது முடியாத ஒன்ருகவே இருந்து வருகிறது.

பாகிஸ்தான் சிருஷ்டிகர்த்தாவான ஜின்ன அவர்களிடம் வைத்திருந்த நம்பிக்கை அளவிற்கு, மற்ற தலைவர்கள்மீது அங்குள்ள பெரும்பான்மையான மக்கள் நம்பிக்கை வைத்திருக்கவில்லை. இத்துறையில் ஓரளவிற்கு அடுத்தபடியாக, குறிப்பிடக்கூடியவராக இருந்துவந்த லியாகத் அலியும் தொலைக்கப்பட்டு விட்டார்.

ஜின்னவின் மறைவுடன் தோன்றிய 'அதிகார அரசியல் நோய்' லியாகத் அலியின் உயிரைக் குடித்ததோடு நின்றுவிடாமல், வெளிப்படையாகத் தலைவிரித்தாடவும் தொடங்கி விட்டது. ஆடத் தொடங்கிய அந்த நோய் மேலும் மேலும் தீவிரமாகிக்கொண்டே வருகிறது.

பாகிஸ்தானில் தலைவர்களுக்குப் பஞ்சம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. குறிப்பிட்ட ஒவ்வொரு தலைவர்களையும் எத்தருணத்திலும் ஆதரித்து நிற்கும் சிறு சிறு கூட்டத்திற்கும் பஞ்சம் உண்டாகிவிடவில்லை.

ஒவ்வொரு தலைவர்களுக்கும் சிறு சிறு கூட்ட மக்களுக்கும் இருக்கும் தொடர்பு, குறிப்பிட்ட ஒரு கொள்கை அடிப்படையில் ஏற்பட்டிருப்பது அல்ல. நீண்டகாலமாக இருசாராரிடையிலும் உருவாகி வளர்ந்துள்ள 'அறிமுகமே' இத்தொடர்புக்கு அடிப்படையாகும்.

பாகிஸ்தான் முழுவதிலும் இருக்கும் பெரும்பான்மை மக்களிடை இச்சாதாரண 'அறிமுக'த் தொடர்பு கொண்டவர்களாக, அங்கிருக்கும் தலைவர்களில் ஒருவர்கூட இல்லை. ஒவ்வொரு தலைவர்களும் குறிப்பிட்ட பகுதியில், குறிப்பிட்ட சிறு கூட்டத்தின் ஆதரவு பெற்றிருப்பவர்களாகவே உள்ளனர்.

மரியாதை காட்ட வேண்டிய நிலையிலோ, அல்லது அன்புடன் கலந்த ஆதரவு காட்டக் கட்டுப்பட்ட நிலையிலோ அங்கு ஒரு தலைவரும் இல்லை. ஒருவரை ஒருவர் மீறக்கூடியவர்களாகவோ, ஒருவருக்கு ஒருவர் குறைந்துள்ளவர்களாகவோ அங்குள்ள தலைவர்களில் ஒருவரும் இல்லை. அனைவரும் சமபலம்—ஒத்த செல்வாக்குக் கொண்டிருப்பவர்களாகவே உள்ளனர்.

குறிப்பிட்ட ஒருவரை தலைவராக உயர்த்துவதும் தரைமட்டமாக்குவதும் ஒரு நாட்டு மக்கள் பெற்றுள்ள அரசியல் விழிப்புணர்வைப் பொறுத்துள்ள விஷயம். அத்தகு உணர்வு பாகிஸ்தான் மக்களில் பெரும்பான்மையினரிடம் அறவே கிடையாது என்பதை சென்ற கால நடைமுறை வரலாறு உறுதி செய்வதாக இருக்கிறது.

எனவே, கண்ணிருந்தும் காண முடியாதவர்களாகவும், கருத்திருந்தும் அறிய முடியாதவர்களாகவும், சக்தி இருந்தும் செயலாற்ற முடியாதவர்களாகவும், தலைவர்களின் கோணல் போக்கைத் தட்டிக் கேட்க முடியாமல், நாட்டில் காணப்பெறும் அரசியல் நிச்சயமற்ற நிலைக்கு சிறந்த பரிகாரம் தேட முடியாமல், நாட்டில் நடைபெற்று வரும் அரசியல் கூத்துக்களை, வெறும் பார்வையாளர்கள் போல் கண்டு வருகின்றனர், பாகிஸ்தான் பெரும்பான்மை மக்கள்.

தலைவர்களைக் குட்டிக் கேட்க வேண்டிய மக்களோ, நிலைமையை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிருர்கள்; தலைவர்களோ, மக்களின் இத்தேக்க நிலையை, அலட்சியப் போக்கை தங்களுக்கு ஒரு கிடைத்தற்கரிய வாய்ப்பாகக் கொண்டு, 'அதிகார அரசியல்' போராட்டத்தில் தீவிரமாகக் குதித்திருக்கிருர்கள்.

கவர்னர்-ஜெனரலாக இருப்பவர் பிரதமராவதும், சில நாள் சென்றபின் வேறு ஒருவர் பிரதமராக்கப்பட்டு, முன்னுள் பிரதமர் மீது ஒழுக்கக்கேட்டைச் சுமத்திவிட்டு வேறு ஒருவரைப் பிரதமராக்குவதும் பாகிஸ்தான் அரசியலில் சாதாரண சம்பவங்களாகிவிட்டன. மத்திய அரசாங்கத்தில்தான் இப்பதவிக் குழப்பம் என்பதில்லை. இதற்குத் துளியும் குறையாத நிலையில் மாநில ஆட்சிகளின் நடைமுறையும் உள்ளது.

ஒரு அமைச்சர் குழுவில் ஏற்படுகிற உள்ளடி போராட்டம், நிலையான நிர்வாக இயந்திரத்தைப் பாதித்தே தீரும்; அதனல், நாட்டின் நிர்வாகத் துறைகள் அனைத்தும் தேக்கமடையும்; அத்துடன் ஊழலும், ஒழுக்கக் குறைவும் உச்சம் பெறும்; பொதுமக்களின் அறநெறியும் அதனல் ஆட்டம் கொடுப்பது நிச்சயம்.

ஏழு ஆண்டுகளாகப் பணிபுரிந்து ஒரு அரசியல் ஆக்க மன்றம், பாகிஸ்தானுக்கு என ஒரு அரசியல் சட்டத்தை உருவாக்குவதில் தவறிவிட்டிருக்கிறது. திட்டத்தைத் தயாரிக்கக் கூடாது என்பதல்ல அதன் உள்ளக்கிடக்கை. ஆனல், மேற்கண்ட சபை தனது நோக்கத்தை நிறைவேற்றவிடாமல் முட்டுக்கட்டை போட்டு வந்திருக்கின்றனர், அதை ஆட்டிப்படைக்கும் இடத்தில் இருந்த பாகிஸ்தான் அரசியல் தலைவர்கள்.

தனது குறிக்கோளை நிறைவேற்ற முடியாத அக் கையாலாகாத சபையை, கவர்னர்-ஜெனரல் கலைத்துவிட்டார். முகமது அலி மந்திரிசபையில் புதிய 'தலைவர்'கள் பதவி பெற்றனர். மேற்கு பாகிஸ்தானில் இருந்த பல மாநிலங்களையும் ஒழித்துவிட்டு ஒரே மாநிலமாக ஆக்கப்பட்டது. மேற்கு பாகிஸ்தானில் ஒரு ஆட்சியும், கிழக்கு பாகிஸ்தானில் ஒரு ஆட்சியும், இரண்டுக்கும் சேர்த்து ஒரு மத்திய ஆட்சியும் நிறுவப்பட்டது.

இதனலும் பாகிஸ்தானில் அரசியல் நிச்சயத் தன்மை உருவாகிவிடவில்லை; குழப்பம்தான் தொடருகிறது.

இதற்கிடையில், அரசியல் ஆக்க மன்றத்தைக் கலைப்பதற்கு கவர்னர்-ஜெனரலுக்கு அதிகாரம் கிடையாது என அம்மன்றத்தின் தலைவர் சிந்து மாநில உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். கலைத்தது தவறு எனவும், புதிய மந்திரிகள் செயலாற்றக் கூடாது எனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டது.

அத்தீர்ப்பை எதிர்த்து, பெடரல் நீதிமன்றத்திற்கு பாகிஸ்தான் அரசாங்க சார்பில் 'அப்பீல்' செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. அவ்வப்பீலிலும், அரசாங்கத்திற்கு விரோதமாக, சிந்து நீதி மன்றத்தீர்ப்பு உறுதி செய்யப்பட்டு விட்டால், பாகிஸ்தான் அரசியலில் பெரியதோர் கொந்தளிப்பு ஏற்படுவது நிச்சயத்திலும் நிச்சயமாகும்.

காலஞ் சென்ற ஜின்னவால் நல்லெண்ணத்துடன் உருவாக்கப்பட்ட பாகிஸ்தானுக்கு, அதன் தலைவர்களால் இன்னும் என்னென்ன இன்னல்கள் ஏற்பட இருக்கின்றனவோ யார் கண்டார்கள்? பாகிஸ்தான் குழப்பத்திலிருந்து மீள ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது, குறிப்பிட்ட சில துறைகள் நீங்கலாக மற்ற துறைகள் அனைத்திலும் மாநிலங்களுக்கு முழு உரிமை கொடுத்து, பிரிந்து செல்லும் உரிமையும் கொண்ட ஒரு கூட்டாட்சி ஏற்படுத்த, பாகிஸ்தான் தலைவர்கள் முன்வருவதைப் பொறுத்துத்தான், பாகிஸ்தான் எதிர்காலம் உயர்நிலை அடைவது இருக்கிறது.

நீர்வளிக்குண்டின் ஆற்றல்!

"ஒரு நீர்வளிக்குண்டு 10,000 சதுர மைல்களை ரேடியக் கதிர்களால் பாதித்துவிடும்; ஒரு திட்டப்படி இதுபோன்ற 28 குண்டுகள் வீசப்பட்டால், அணுக் கதிர் இயக்கத்தின் மூலம் 5 கோடி மக்களையும், உலகின் தொழிற்சாலைப் பகுதிகளில் 3-ல் 2 பகுதியையும் அழித்துவிடும்," என்று, அமெரிக்கப் படையின் துணைப் பிரதமர் ஜெனரல் ஜேம்ஸ் கூறியிருக்கிருர்.

"அணு, நீர்வளி ஆயுதங்கள் போன்றவற்றில் ரஷ்யர்கள் நம்மைவிட பின்தங்கியே இருக்கிருர்கள் என்று கூறுவது அடியோடு அறிவீனமான ஒன்ருகும்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

1955 ஜனவரி இறுதிவரை, இடம் பெயர்ந்த சுமார் 41,000 பேருக்கு, மொத்தம் சுமார் 9 கோடி ரூபாய் நஷ்டஈடு அளிக்கப்பட்டிருக்கிறது.

வருமானக் கட்டுப்பாடு விதிக்க!

முடிவெடுக்கவே மூன்று - நான்கு ஆண்டுகள் தேவையாம்!

லக்னே, பிப். 14—

வருமானத்தைச் சரிசமமாகப் பங்கீடு செய்வதும், குறைந்தபட்ச வருமானத்தை வரையறுப்பதும், கட்டுப்படுத்துவதுமான பிரச்சினை, காங்கிரஸ் செயற்குழுவின் கருத்தைக் கவர்ந்திருப்பதாகவும், கூடிய விரைவில் அதற்கு ஒரு உருவம் கோடுக்கப்படும் என்றும் காங்கிரஸ் தலைவர் தேபர் குறிப்பிட்டார்.

'மேற்படி பிரச்சினைக்குக் காங்கிரஸ் ஒரு உருவத்தை ஆக்கிய போதிலும், அதை நடைமுறைக்குக் கொண்டுவருவதா, கூடாதா என்பதில் முடிவெடுக்க மேலும் மூன்று நான்கு ஆண்டுகள் தேவைப்படும்' என அவர் அறிவித்துள்ளார்.

ஆவடி மாநாட்டில், இதுபற்றிய தீர்மானம் ஒன்று தனி நபரால் கொண்டுவரப்பட்டு, காங்கிரஸ் பொருள் ஆய்வுக் குழுவினரால் ஒதுக்கிவிடப்பட்டதும் கருதத்தக்கது.

உரிமைப் போராட்ட காலத்தில் காங்கிரஸ் கட்சியினரிடம் காணப்பெற்றதாகக் கூறப்படும் தனிப்பண்பாடு இப்பொழுது அவர்களிடை காண முடியாது போனது குறித்தும், மீண்டும் அதைப் புகுத்த அனுசரிக்கப்பட வேண்டிய ஒழுக்க விதிகளை வகுக்க செயற்குழு திட்டமிட்டிருப்பதைக் குறித்தும் தேபர் மேலும் விளக்கியுள்ளார்.

"சீன-ரஷ்ய ஒற்றுமையால் அழிக்க முடியாத ஆதிபத்தியம் உலகில் எங்கும் இல்லை"

சீனக் குடியரசுத் தலைவர் மா-சே-துங் பேச்சு

'உலகிலுள்ள ஏகாதிபத்தியங்கள் ஆக்கிரமிப்புப் போரை ஆரம்பித்தால், ஈடு இணையில்லாதபடி அந்த ஆதிக்கக்காரர்களை ஒழித்துக் கட்டுவோம்," என்று மக்கள் சீனத் தலைவர் மா-சே-துங், சீன—சோவியத் உடன்படிக்கையின் 5-வது ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

மேலும் அவர், "தகர்த்தொழிக்கப்பட முடியாத ஏகாதிபத்தியங்கள் எதுவுமே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு சீனவுக்கும் சோவியத்திற்குமிடையே நல் ஒத்துழைப்பு இருந்து வருகிறது," என்று குறிப்பிட்டார்.

சோவியத் ரஷ்யா, சீன ஆகியவற்றைச் சுற்றி அமெரிக்க ஆக்கிரமிப்பு வட்டாரங்கள் அபாயம்அளிக்கக்கூடிய 'வலை'கள் போட்டுள்ளதாகவும், பார்மோசா வட்டாரத்தில் அவை ஆத்திரமூட்டும் வகையில் நடந்துகொண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினர்.

அணுசக்தி மின்சார நிலையங்கள்

★

பிரிட்டன்:

பிரிட்டனில் இன்னும் பத்து ஆண்டுகளில் 12 அணுசக்தி மின்சார நிலையங்களை நிர்மாணிக்கத் தற்காலிகத் திட்டம் ஒன்றை பிரிட்டன் சர்க்கார் அறிவித்திருக்கிறது. இத்திட்டத்தை நிறைவேற்ற சுமார் 30 கோடி பவுன் செலவாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

நிர்மாணிக்கப்பட இருக்கும் இந்த 12 நிலையங்களும், தொழில்களுக்குப் பயன்படக்கூடிய மின்சாரத்தை 150 முதல் 200 கோடி 'வாட்' வரை ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யும் என்றும், இந்த அளவு மின்சார விசை, 50 அல்லது 60 லட்சம் டன் நிலக்கரி மூலம் கிடைக்கும் மின்சார விசைக்குச் சமமானது என்றும் கூறப்படுகிறது.

முதலாவது நிர்மாணிக்கப்பட இருக்கும் அணுசக்தி நிலையம், விசை உற்பத்தியைத் துவக்க இன்னும் 5 ஆண்டுகளாகும்; 1957-ம் ஆண்டின் மத்தியில், மேலும் இரண்டு நிலையங்களை நிர்மாணிக்கும் வேலை ஆரம்பமாகும்; அவை இரண்டும் 1961-ல், விசை உற்பத்தியைத் துவக்கும் என்றும் கூறப்படுகிறது.

மக்கள் சீன:

சீனவின் வடமேற்குப் பகுதிகளில் அணுசக்தி மின்சார நிலையங்கள் பல அமைக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் கூறுகின்றன.

மதுக் குடியர் தப்ப முடியாது!

பிரான்சில் ஏற்படுகின்ற சாலைப் போக்கு-வரத்து விபத்துக்களில் 60 முதல் 70 சதவிகிதம் வரை, காரை ஓட்டிச் செல்லும் 'டிரைவர்'களின் குடிபோதையால்தான் நேரிடுகின்றன என்று, தற்போது 'மதுபான மீட்டர்' ஒன்றைக்கண்டுபிடித்துள்ள மிச்செல் பிடெலிவ்ரே என்பவர் தெரிவித்திருக்கிருர்.

இவர், ஒரு 'டிரைவர்' வெளியிடுகின்ற மூச்சில் கலந்துள்ள மதுவாடை விகிதத்தைக் கொண்டே எவ்வளவு மது அருந்தியிருக்கிருர் என்பதைக் கண்டுபிடிப்பதற்கான புதிய கருவி ஒன்றை கண்டுபிடித்துள்ளாராம்.

இக்கருவி, விபத்து நடைபெற்ற இடத்திலேயே பரிசோதனை செய்ய போலீஸ் வண்டிகளில் எடுத்துக்கொண்டு போகக்கூடிய அளவு உருவம் உள்ளதாம்.

மது அருந்தியவர், தனது வாயினல் இந்தக் கருவிக்குள் காற்றை ஊத வேண்டுமாம். அந்தக் காற்றில் கலந்துள்ள மதுவாடையின் விகிதத்தைக் கொண்டு அவரது வயிற்றிலுள்ள மதுவின் அளவை அக்கருவி கணக்கிடுகிறதாம்!

'டி.டி.டி.' மருந்து உற்பத்தி

தொழிற்சாலை பம்பாயிலா? திரு-கொச்சியிலா?

பூன, பிப். 15—

இந்தியாவில் இன்னுமொரு 'டி. டி. டி.' மருந்து உற்பத்தித் தொழிற்சாலை வெகு சீக்கிரத்தில் நிறுவப்படும். அப்படி ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கு, மத்திய அரசாங்கம், உலக சுகாதார நிறுவனத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருவதுடன் அவர்களின் உதவியையும் கோரி இருப்பதாக, மத்திய சர்க்கார் உற்பத்தி இலாக்கா மந்திரி கே. சி. ரெட்டி இங்கு கூறியிருக்கிருர்.

அந்தத் தொழிற்சாலையை எங்கு நிறுவுவது என்ற முடிவு இன்னும் மேற்கொள்ளப்படாவிட்டாலும், பம்பாயிலோ அல்லது திரு-கொச்சியிலோ அது நிறுவப்படும் என்றும், அதன் உற்பத்தி அளவு 1800 டன்னக இருக்குமென்றும் அவர் கூறியிருக்கிருர். இப்போது இந்தியாவில் ஒரே ஒரு டி. டி. டி. உற்பத்திச்சாலைதான் இருக்கிறது.

அந்தத் தொழிற்சாலை டெல்லியில் உள்ளது.

தொத்து நோயைப் போக்க ‘தேவதை’ ஊர்வலம்!

இரதத்தில் ஏற்றி நாய் இழுத்து வந்ததாம்!

ஆமதாபாத்திலுள்ள காகாரேச்சி எனும் கிராமத்தில் ‘சிதாலா தேவி’ எனப்படும் தேவதையின் இரதம் ஒரு நாயால் இழுத்து வரப் படுகையில், அவ்வூர் பஞ்சாயத்தார் அந்த இரதத்தைச் சுக்குநூறாக உடைத்தெறிந்து, நாயையும் அவிழ்த்து விரட்டிவிட்டனராம். குஜராத்திய கிராமத்தினர் தொத்து நோய்கள் பற்றிக் கொண்டிருந்த அறியாமையின் காரணமாகவே, அந்த ‘அறியாமைத் தேவதை’யின் ஊர்வலம் நடைபெற்றிருக்கிறது.

பெரியம்மை போன்ற கொடிய தொத்து நோய்களை அறவே தவிர்க்கவும், அவற்றைப் பரவவிடாமல் தடுக்கவும் வேண்டுமானால் அந்தத் தேவதையை இரதத்தில் வைத்து, அந்த இரதத்தை நாயின் உதவியால் பல இடங்களுக்கும் இழுத்துச் சென்றுவிட்டால் போதுமென்று அம்மக்கள் கருதியே இவ்வாறு செய்தனராம்.

அவ்வாறே மேற்குறிப்பிட்டுள்ள ஊருக்கு அந்த இரதம் வருவதைக் கேள்விப்பட்டதும், அங்குள்ள மக்கள் கொட்டு முழக்கத்துடன் அத் ‘தேவி’யாரை எதிர்கொண்டழைக்கச் சென்றனராம். இது சம்பவம் கேட்ட அவ்வூர் பஞ்சாயத்தார் அங்கு விரைந்து, இரதத்தையும்சிலையையும் தவிடு பொடியாக்கி, நாயையும் விரட்டிவிட்டு, வியாதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு வேறு நிவாரணங்களிருக்கின்றன என்றும், அந்தத் தேவதை நிச்சயமாக நிவாரணமளிக்க மாட்டாள் என்றும் அவர்களுக்கு அறிவுரை கூறினராம்.

புதுவை மாநிலத்தில் அபிவிருத்தி வேலைகள்

புதுச்சேரி, பிப். 12—

புதுவை மாநிலத்தில் அபிவிருத்திக்கான வேலைகளை மேற்கொள்ள இந்திய சர்க்கார், மேலும் ரூ. 17,011 அனுமதித்துள்ளது. இத்தொகையில் இந்த நிதி ஆண்டிற்குள் 6½ சத விகிதம் செலவழிக்கப்பட்டு, ஒரு வாரத்துக்குள் வேலை துவங்கும்.

மேலும், அண்மையிலுள்ள கொம்யூன்களில் ரூ. 2½ லட்சம் செலவில் மின்சார அபிவிருத்தி செய்யப்படும் என்றும், புதுவையில் மின்சார அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிகிறது.

காரைக்காலுக்கு ரூ. 2,14,000 செலவிலும், மாஹிக்கு ரூ. 1,37,000 செலவிலும், ஏனாமுக்கு ரூ.50,000 செலவிலும் இவ்வேலைகள் மேற்கொள்ளப்படுமாம்.

மேலும் ரூ. 13 லட்சம் செலவில் போக்குவரத்துச்சாலைகள் வேலைகளும் மேற்கொள்ளப்படுமென்று கூறப்படுகிறது.

நில உரிமைச் சட்டம்

நான்கு அம்ச மசோதா

நிறைவேற்ற சர்க்கார் உத்தேசம்

சென்னை, பிப். 15—

மாநிலம் பூராவிலும் அமுலாகக் கூடிய நிலவுரிமைச் சட்டத்தை நிறைவேற்றிவைக்க சென்னை சர்க்கார் உத்தேசித்துள்ளனர் எனத் தெரிகிறது.

இன்னும் சில மாதங்களில் நான்கு அம்ச மசோதா ஒன்று கொண்டுவரப்படும் என்றும், இச் சட்டத்திற்காக ஆண்டுக் கணக்கில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்றும் சென்னை சட்டசபையில் ரெவினியூ அமைச்சர் மாணிக்கவேலர் தெரிவித்திருக்கிறார்.

தென் கன்னட மாவட்டத்தில் குடியானவர்கள் தாங்கள் சாகுபடி செய்யும் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடுக்கப் பாதுகாப்புச் சட்டம் ஏற்கனவே இருந்து வருகிறது. விரிவான மற்றொரு சட்டம் இயற்றப்படும் வரையில் பழைய சட்டத்தை நீடித்து அமுல் நடத்த கொண்டுவரப்பட்ட மசோதா ஒன்றை சபை நிறைவேற்றியது.

திருச்சி மாவட்டத்திலும் விவசாயிகளுக்குப் போதிய பாதுகாப்பு வசதிகள் தேவையென ஒரு உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.

இதுபற்றி எழுந்த விவாதத்தின் இறுதியில் பதிலளித்துப் பேசுகையில் அமைச்சர், பொதுவான பாதுகாப்புதரும் மசோதா இன்னும் ஒரு சில மாதங்களுக்குள் கொண்டுவரப்படும் என்று கூறினர்.

இம்மசோதாவில், சாகுபடி உரிமை, வார நிர்ணயம், நிலவரம்பு, சொந்த சாகுபடிக்கு நிலத்தை மீட்பதற்கான நிபந்தனைகள் ஆகிய 4 அம்சங்கள் அடங்கியிருக்குமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சென்னை மேல் (சட்ட) சபையில்......

சென்னை மருத்துவ உத்தியோக சர்வீசில் உதவி சர்ஜன்கள் பதவிக்கான மருத்துவ அதிகாரிகள் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது என்று அமைச்சர் ஏ. பி. ஷெட்டி தெரிவித்திருக்கிறார்.

கடந்த ஆண்டில் (1954) நவம்பர் முதல் தேதியன்று, 7 மருத்துவ நிறுவனங்களிலும், 5 சர்க்கார் மருத்துவ மனைகளிலும் டாக்டர்களே இல்லையென்றும், பக்கங்களிலுள்ள டாக்டர்களே இவைகளுக்கு வாரத்தில் இருமுறை அல்லது மும்முறை வந்து நோயாளிகளுக்கு சிகிச்சை செய்தனர் என்றும், கடந்த 6 மாதங்களாக 3 இடங்கள் பூர்த்தி செய்யப்படாமலேயே இருக்கின்றன என்றும், இவற்றிற்கெல்லாம் காரணம் உதவி சர்ஜன் பதவிக்கு லாயக்கான மருத்துவர்கள் இல்லாததே என்றும் கூறினர்.

பின்னர் அவர், சிற்சில குறிப்பிட்ட இடங்களிலுள்ள மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையையும், அங்குள்ள நோயாளிகளின் எண்ணிக்கையையும் வெளியிட்டார். அவை பின்வருமாறு :—

செங்கற்பட்டு : 112 படுக்கைகள் — 119 நோயாளிகள் ; கோவை : 500—662 ; கடலூர் : 160—266 ; வேலூர் : 202 — 282 ; சேலம் : 325–595 ; உதகை: 125—170 ; திருச்சி : 275—551; பாளையங்கோட்டை : 135—190 ; தஞ்சாவூர் : 636—942 ; மதுரை : 665—940 ; இராமநாதபுரம் : 100 —248.

மேற்கண்ட மருத்துவ மனைகளில் சேர்க்கப்படும் நோயாளிகளுக்கு அவசியமான மருந்துகள், உணவு, உடை ஆகியவை தரப்படுகின்றன என்றும், நோயாளிகளுக்கான படுக்கை வசதிகள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன என்றும் கூறினர்.

எண்ணெய் பிண்ணாக்கு ஏற்றுமதி

இந்திய சர்க்கார் முடிவு

1955 ஏப்ரல் முடிய பருத்தி விதை, ஆளி விதை, தேங்காய் இவைகளின் தரத்தைச் சேர்ந்த எண்ணெய் பிண்ணாக்குகளை, 25,000 டன் வரை ஏற்றுமதி செய்ய இந்திய சர்க்கார் அனுமதித்திருக்கிறது.

மதுரை மாநாடு

வரவேற்புக் குழுக் கூட்டம்

வரவு-செலவு கணக்கு பரிசீலனை

13—2—55 காலை 11-மணிக்கு மதுரை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாட்டு வரவேற்புக்குழுக்கூட்டம் தோழர் தா. ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநாட்டு வரவு-செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது :—

வரவு :—

டிக்கட் விற்பனை மூலம்	ரூ.	15,647- 0-0
நன்கொடை மூலம்	ரூ.	779- 0-0
ஸ்டால் வாடகை மூலம்	ரூ.	400- 0-0
விளம்பர மூலம்	ரூ.	100- 0-0
வாளி விற்று வரவு	ரூ.	20- 0-0
ஆக மொத்தம்	ரூ.	16,946- 0-0
செலவு :—	ரூ	12,703- 3-6
இருப்பு	ரூ.	4,242-12-6

நெடுஞ்செழியன் வசம் தலைமைக் கழகத்தில் இருப்பு	ரூ.	3,000- 0-0
டிக்கட் நிலுவை	ரூ.	215- 0-0
செயலாளர் எஸ். முத்து வசம்	ரூ.	1,027-12-6
		4,242-12-6

பின்னர், மதுரையில் கழகத்திற்குக் கட்டிடம் வாங்குவதற்காக, ஏற்கனவே தலைமை நிலையத்திலிருக்கும் ரூ. 3,000-த்துடன், செயலாளர் எஸ். முத்து வசம் இருக்கும் ரூ. 1,027-12-6-ஐயும் சேர்த்துவிட வேண்டியது என்று தீர்மானிக்கப்பட்டது.

வேண்டுகோள்

“கடந்த 5—12—54-ல் நடைபெற்ற நாகை வட்ட தி. மு. கழகக் கமிட்டிக்கூட்டத்தில், கழகத்தின் வளர்ச்சிக்காகவும், ஆக்க வேலைக்காகவும், மேற்படி வட்டத்திலுள்ள ஒவ்வொரு கிளைக்கழகமும் ரூ. 5 வீதம் கொடுக்க வேண்டுமென்று நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி, கிளைக்கழகச் செயலாளர்கள், தயவு செய்து தாமதமில்லாமல் மேற்படி தொகையை அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்கிறேன்,” என, நாகை தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. கே. சித்திரவேலு அறிவித்துள்ளார்.

‘நம் நாடு’ வளர்ச்சிக்கு அன்பளிப்பு

[தோழர் இரா. நெடுஞ்செழியன் மூலம் மாவட்டச் சுற்றுப் பயணத்தின்போது, ‘நம் நாடு’ வளர்ச்சிக்காக அன்பளிப்பாக அளிக்கப்பட்ட கீழ்க்கண்ட தொகைகளை அன்புடன் பெற்றுக்கொண்டோம். நிதியளித்த அனைவருக்கும் எம் நன்றி—பொறுப்பாளர்.]

நாமக்கல் பொதுக்கூட்டத்தில் வசூல் :—

கொண்டிசெட்டிபட்டி தி மு. கழகம்	ரூ	1-0-0
சேந்தமங்கலம் தி.மு.க.	ரூ.	1-0-0
முதலைப்பட்டி தி.மு.க.	ரூ.	1-0-0
முட்டாஞ்செட்டி தி.மு.க.	ரூ.	1-0-0
நாமக்கல் வள்ளுவர் நாடக மன்றம்	ரூ.	0-8-3
வகரம்பட்டி தி.மு.க.	ரூ	1-0-0
நாமக்கல் தி.மு க.	ரூ.	2-0-0
” ஒரு தோழர்	ரூ.	1-0-0
மொத்தம்	ரூ.	8-8-3

1961-ம் ஆண்டுக்குள்ளாகப் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டு மைசூரில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பல காரியத் திட்டமான பத்ரா நதி அபிவிருத்தித் திட்டத்துக்கு மொத்தம் 18 கோடி ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ருமேனிய தூதுவராலயம் கைப்பற்றப்பட்டது!

நாடுகடத்தப்பட்ட ருமேனியர்கள் சுவிட்சர்லாந்தில் ஆர்ப்பாட்டம்!

பெர்னே (சுவிட்சர்லாந்து) பிப். 15—

சுவிட்சர்லாந்திலுள்ள ருமேனிய தூதுவராலயத்தில், ருமேனியாவைச் சேர்ந்த ஆறு கம்யூனிஸ்டு எதிர்ப்பாளர்கள் நுழைந்து, துப்பாக்கிச் சண்டைகள் நடத்தி, தூதுவராலயத்தைச் சேர்ந்த அனைவரையும் வெளியே துரத்திவிட்டு, காரியாலயம் முழுவதையும் கைப்பற்றிக்கொண்டனராம். (ருமேனியா, சோவியத் ரஷ்யாவுடன் நேச உறவு கொண்ட நாடுகளுள் ஒன்றாகும்.)

தூதுவராலய அதிகாரி, அவரது குடும்பத்தினர், இன்னும் சில சிப்பந்திகள் ஆகியோரை அக் கட்டிடத்தினின்றும் வெளியேற அனுமதித்தனராம் அந்த ஆயுதபாணிகள்! அந்த அதிகாரியும், அவரது குடும்பத்தாரும் பக்கத்திலுள்ள வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளார்களாம்!

தூதுவராலயத்தைக் கைப்பற்றிய அந்த 6 பேர்களில் ஒருவர், சிறிது நேரம் கழித்து வெளியில் வந்ததும், சுவிஸ் போலீசார் பிடித்துக்கொண்டனராம். அவர்களிடத்தில் பிடிபட்ட அந்த ஆயுதபாணியான கம்யூனிஸ்டு எதிர்ப்பாளர், ருமேனியாவில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கும் ஐந்து கம்யூனிஸ்டு எதிர்ப்புத் தலைவர்களும் விடுதலை செய்யப்படும் வரையிலும் மேற்படி தூதுவராலயத்திலிருக்கும் மற்ற தமது தோழர்கள் வெளிவரப்போவதில்லை என்று கூறினராம். அவர்கள் தங்கள் உயிர் உள்ளவரையிலும் அக்கட்டிடத்தைக் கைவிட மாட்டார்களென்றும் அவர் குறிப்பிட்டார்.

அவரிடம், தூதுவராலய தஸ்தாவேஜுகள் சில இருந்தனவாம். போலீசார் அவற்றைக் கைப்பற்றிக்கொண்டு, ருமேனிய தூதுவரிடம் அவற்றைச் சேர்த்தனராம்.

இச்சம்பவம் பற்றி சுவிட்சர்லாந்துக்கு ருமேனிய சர்க்கார் ஆட்சேபக் குறிப்பொன்றை அனுப்பியுள்ளது. அக்குறிப்பில், அந்த ருமேனிய ‘பாசிஸ்டு’களைக் கைது செய்து, ருமேனிய சர்க்காரிடம் ஒப்படைக்குமாறும், இந்தக் கடுமையான நிலைமை சம்மந்தமாக அவசியமான நடவடிக்கைகளை சுவிஸ் சர்க்கார் எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளதாகக் காணப்படுகிறது.

சுவிஸ் நாட்டில் உள்ள ருமேனியத் தூதுவராலயத்தைக் கைப்பற்றியுள்ள அந்த ஆறு பேரும், ருமேனியாவிலிருந்து கள்ளத்தனமாக சுவிஸ் நாட்டிற்குள் நுழைந்தவர்கள் என்றும், அவர்கள், ருமேனியாவில் கம்யூனிஸ்டு எதிர்ப்பு இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்றும் தெரிகிறது. அவர்கள் ஆறு பேரும் ருமேனிய சர்க்காரால் நாடு கடத்தப்பட்டவர்களாம்.

கைது செய்யப்பட்ட ஒருவர், தாங்கள் பெர்னேயில் நடத்தியதைப் போன்ற தாக்குதல்களை இன்னும் கோபன்ஹேகன், ஸ்டாக்ஹோம் போன்ற இடங்களிலும் நடத்தத் திட்டமிட்டிருந்ததாகப் போலீசாரிடம் கூறியதாகத் தெரிகிறது.

ருமேனியாவில் உள்ள கம்யூனிஸ்டு அதிகாரிகள், கம்யூனிச எதிர்ப்புத் தலைவர்கள் பலரைக் கைது செய்ததை ஒட்டியே இந்தத் தாக்குதல் நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது.

சென்னை சட்ட சபையில்...

★

கடை சிப்பந்திகள் நிலைமை

கடை சிப்பந்திகளின் நிலைமை சம்பந்தமாக இந்திய சர்க்கார் விரிவானதொரு மசோதாவை விரைவிலேயே தயாரித்துக் கொண்டுவர விருப்பதாகவும், அம்மசோதா வந்த பின்னர் மாநில சர்க்கார் மேற்கொண்டு எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமென்றும் அமைச்சர் பக்தவத்சலம் கூறினர்.

“இம்மசோதா தயாரிப்பது சம்பந்தமாக மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்களின் யோசனையைக் கேட்டிருக்கிறதா?” என்று கேட்கப்பட்டபோது அமைச்சர், மத்திய அரசாங்கத்தின் அந்த மசோதா இப்போதுதான் உருவாகியே வருகிறதென்றும், அது தயாரான பிறகுதான் மாநில சர்க்கார் தனது ஆலோசனைகளைத் தெரிவிக்கும் என்றும் கூறினர்.

தொழில் தகராறு

கடந்த 1953—54-ம் ஆண்டில், சென்னை மாநிலத்தில் மொத்தம் 356 தொழில் தகராறுகள் ஏற்பட்டன என்றும், அவற்றுள் 113 தகராறுகள் சமரசம் செய்து தீர்த்துவைக்கப்பட்டன என்றும், 124 தகராறுகள் ‘அட்ஜுடிகேஷனு’க்கு அனுப்பப்பட்டன என்றும், 120 தகராறுகள் ‘அட்ஜுடிகேஷனு’க்கு அனுப்ப மறுக்கப்பட்டன என்றும் கூறினர்.

“இத்தகராறுகளை ‘அட்ஜுடிகேஷனு’க்கு அனுப்புவதில்சர்க்கார் என்ன கொள்கையை மேற்கொள்கிறது?” என்ற கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில், அமைச்சர் “வீணாக நீதிமன்றங்களில் வழக்காடச் செல்வதைத் தவிர்ப்பதே இந்த நோக்கம்,” என்று குறிப்பிட்டார்.

உத்தேசமே இல்லையாம்!

கோவையில் மருத்துவக்கல்லூரி ஒன்றை ஏற்படுத்த சர்க்காருக்கு உத்தேசமே கிடையாதென்றும், அங்குள்ள மக்கள்தான் அதுபற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றனரே தவிர சர்க்கார், தற்போது அங்கே கல்லூரி நிறுவுவதற்கில்லை என்றும் அமைச்சர் ஏ. பி. ஷெட்டி கூறினர்.

இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய சர்க்கார் நிதி உதவி செய்தால்தான் அங்கு கல்லூரி நிறுவுவதற்கான விஷயங்கள் கவனிக்கப்படுமெனவும் அவர் கூறினர்.

கடனுதவி கிடையாதே!

மாநிலத்திலுள்ள இரும்பு, எஃகு தொழிற்சாலைகள் எதற்குமே கடனுதவி செய்தது கிடையாதென்றும், இரும்பு, எஃகினால் சாமான்கள் செய்யும் 6 கம்பெனிகளுக்கு மட்டும் சர்க்கார் பண உதவி செய்தது என்றும் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

தஞ்சையில் புறம்போக்கு நிலங்கள்

தஞ்சை மாவட்டத்தில் நிலமில்லாத ஏழைகளுக்குச் சென்ற ஆண்டில் (1954) 4·27 ஏகர் நிலம் இலவசமாகக் கொடுக்கப்பட்டுள்ளதென்றும், இலவச நிலம் கோரிச் செய்துள்ள 734 மனுதார்களில் இன்னும் எவருக்குமே நிலம் அளிக்கப்படவில்லையென்றும், கேள்வி ஒன்றிற்குப் பதிலளித்துப் பேசுகையில் அமைச்சர் மாணிக்கவேலர் கூறினர்.

ஏராளமான அரிசனங்கள் இதற்காக மனுச் செய்துகொண்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, ‘அவர்களுக்கு நிலம் அளிக்கும் வேலையை அரசாங்கம் துரிதப்படுத்துமா?’ என்று உறுப்பினர் ஒருவர் கேட்டபோது, அமைச்சர், புதிய திட்டம் தஞ்சையில் அமுலான பின்னர் நிலைமை சரிப்பட்டுவிடும் என்று தாம் நினைப்பதாகக் கூறினர்.

‘பொற்கால இந்தியா’வின் போலிப் பெருமை!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அழுத்த வஞ்சகச் செயல்களும் புரிந்திருக்கின்றனர்—விந்தியத்திற்கு வடக்கே இருந்தவர்கள்;

“பிற நாட்டவர்களுக்கு வாழ்க்கையில் பற்று இருக்கிறது; ‘நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?’ என்று ஒரு வெளிநாட்டவரைக் கேட்டால், அவர், ‘நான் நலமாகவே இருக்கிறேன்,’ என்று சொல்லுகிறார்; அல்லது, தனக்கு ஏதேனும் இன்னல்கள் இருந்தால் அதையும் துணிவுடன் வெளியில் சொல்லுகிறார்; ஆனால், இந்த நாட்டில் யாரையாவது ‘அப்படிக் கேட்டால், அவர், ‘ஏதோ இருக்கிறேனுங்க,’ என்று பெருமூச் செறிகிறார்; நன்றாக வாழ்வதாகவும் கூறுவதில்லை; வாழ முடியவில்லை என்பதையும் துணிவுடன் வெளியிடுவதில்லை;

‘இந்த நிலையின் பலன்தான், வெளிநாட்டிலிருந்து யார் யார் படையெடுத்து வந்தாலும், அவர்களை எல்லாம், ‘வா, வா’ வென்று வரவேற்றது.

—இவ்வாறு, 12—2—54-ல், பெங்களூரில் நடைபெற்ற கர்நாடக தி. மு. கழக சமூக சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் தோழர் காஞ்சி - கல்யாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது :—

“இந்தியக் குடியரசுத் தலைவரான இராசேந்திர பிரசாத், சமீபத்தில் பேசுகையில், ‘நாம், ஒரு உயர்ந்த பொற்காலத்தையுடையவர்களாயிருந்தவர்தம் பரம்பரையினர்’ என்று குறிப்பிட்டார். விந்தியத்திற்கு வடக்கே, எப்போது, ‘பொற்காலப் பரம்பரை’ இருந்ததோ நாமறியோம். இருந்ததெல்லாம், நான் முன்பு குறிப்பிட்ட ‘படையெடுத்து வந்தாரை எல்லாம் வரவேற்று அடிபணிந்தார்களே,’ அதுதான் இருந்தது.

“உலகத்தில் வாழும் மனித சமுதாயத்திற்கு இந்த இந்தியத் துணைக்கண்டம் என்ன தந்தது?

‘இதோ, ரயில்—ஏறிச் செல்; கப்பல்—கடல் பிரயாணம் செய்; இதோ விமானம்—பறந்து செல்; மின் விளக்கு—ஒளிதர; ஒலி பெருக்கி — உபயோகிக்க; வானொலி—உலகம் பேசுவதைக் கேட்க!’—என்று இவைகளையும், இவை போன்ற எத்தனையோ எண்ணற்ற பொருள்களையும் மேலைநாடுகள் உலக மனித சமுதாயத்திற்குத் தந்துள்ளனவே, அதேபோன்று, இந்தியத் துணைக் கண்டமும் தனது பங்கிற்கு (Material Contribution of India) என்ன தந்தது?

“என்றாலும், டாக்டர் இராசேந்திர பிரசாத் கூறுகிறார்—‘பொற்காலப் பரம்பரையினர்,’ என்று! என்ன பொருள் அதற்கு? இந்தியா உலக சமுதாய வளர்ச்சிக்கு உருப்படியான ஒன்றையும் தராததினால், ‘ஆத்மார்த்தத் துறையில் நாம் உயர்ந்தவர்கள்—வேறெவரைக் காட்டிலும்,’ என்று பெருமையடித்துக் கொள்கிறார்கள்; அவ்வளவுதானே?

“ஆத்மார்த்தத்துறை போன்ற நிலையான உண்மைகளின் அடிப்படை ஏதும் இல்லாது கற்பிக்கப்பட்ட தத்துவங்கள்தான் (Speculative philosophy) இந்தியத் துணைக் கண்டத்தில் மிச்சம்; அவைதான், மக்களிடத்தில், ‘வாழ வேண்டும்’ என்ற எண்ணமும், நாட்டுப் பற்றும் அறவே இல்லாமற் போகுமாறு செய்தன; அதன் விளைவு, ‘வந்தார்கள்—வந்தார்கள்’—என்ற வரலாறு.

“இன்று, இந்த இருபதாம் நூற்றாண்டிலே, நாட்டு மக்களிடையே ஒருவகை விழிப்புணர்வு—‘வாழ்வு தேவை’ என்ற உணர்வு ஓரளவு ஏற்பட்டிருக்கிறதென்றால், அதற்குக் காரணமே வெள்ளையரின் வருகைதான்; நான் இப்படிக் கூறும்போது, சிலர், நம்மை ‘தேசத் துரோகிகள்’ என்று எண்ணவும் கூடும்.

“வெள்ளையரின் வருகையால் இந்தியத் துணைக்கண்டத்திற்கு ஏற்பட்ட தீமைகளின் அளவுக்கு நன்மைகளும் ஏற்படத்தான் செய்தன.

“இங்கிலாந்து போன்ற நாட்டில், சமூகம் உருவாக்கப்பட்டு, நூற்றாண்டுக் கணக்கில் ஆகிவிட்டது; இந்த நாட்டில் இன்னும் சமூகங்களை ஆக்குகிற குடும்பங்களே உண்டாக்கப்படவில்லை.

“திருமணச் சட்டங்கள் (Civil-Marriage Act) இங்கிலாந்திலே, பிரான்சிலே, இன்னும் அதுபோன்ற நாடுகளிலே எல்லாம் உருவாகி, பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன; இங்கு—இந்தியத் துணைக் கண்டத்தில், ‘திருமணச் சட்டம்’ பற்றிப் பேசப்படுகிறது—பலத்த கருத்து வேற்றுமையுடன்; நாம் இப்போதுதான் குடும்பமே உண்டாக்குகிறோம்; அங்கெல்லாம் சமூகம் உருவாக்கப்பட்டு விட்டது; இங்கு இப்போது உண்டாக்கப்படுகிற குடும்பங்கள் வளர்ந்து, காலப் போக்கிலே சமூகம்—புதியதொரு சமுதாயம் உருவாக வேண்டும்; அதற்கிடையில், இப்போதிருக்கிற உளுத்துப்போன சமுதாயம் — ‘பழம் பெருமை மிக்கது—நிரம்ப வளர்ந்து விட்டது,’ என்று யாராவது கூறினால், அது, உண்மைகளை மறைக்கப் பார்க்கிற செயலாகும்

“இப்போதுள்ள சமுதாயத்தைப் பற்றிப் பேசுவதானால், சில பல உண்மைகளைச் சொல்லியாக வேண்டும்; அந்த உண்மைகள் ஆபத்து மிகுந்தவைதான்; அதனாலேயேதான் பலர் அந்த உண்மைகளைச் சொல்லப் பயப்படுகிறார்கள்

“இந்தச் சமூகத்தைச் சீரழித்த அந்த உண்மைகளைச் சுட்டிக் காட்டி, அவை களையப் பட்டாலன்றி, ‘சமூகம் முன்னேறாது — வளராது — நாகரிகம் பெறாது,’ என்று கூறுபவர்கள் நாம் ஒருவர்தான்.

“சமூகம் சரி செய்யப்பட, அல்லது இப்போதிருக்கிற சமூக அமைப்பு மாறி புதியதொரு அமைப்பு வர சிலர், ‘சட்டத்தையும், அவற்றை இயற்றக் கூடிய அதிகாரத்தையும் கொண்டு சாதித்து விடலாம்,’ என எண்ணுகிறார்கள்.

“சட்டம் செய்துவிட்டாலே சமூகம் பண்படும் என எண்ணுவது தவறான போக்காகும்.

“மதுவிலக்குச் சட்டம் சென்னை மாநிலத்தில் அமுலில் இருக்கிறது; ஆனாலும், மதுவிலக்கு வெற்றி பெற்றிருப்பதாக ஆட்சியாளரே கூறத் துணியவில்லையே! இன்னும் கள்ளச்சாராயம் காய்ச்சுவதும், திருட்டுத்தனமாகக் குடித்துவிட்டு ஆடுவதும் நாட்டில் நடைபெறத்தானே செய்கிறது?

“மதுவிலக்குச் சட்டத்தின் மூலம் எதை அரசாங்கம் எதிர்பார்க்கிறதோ, அதனை, இந்தச் சட்டம் யாருடைய நன்மைக்காகச் செய்யப்பட்டதோ அந்த மக்கள் உணரவில்லை; மக்களுக்கு அது உணர்த்தப்படவில்லை. சட்டத்தின் நோக்கம் மக்களுக்குப் புரிந்திருந்தால் அல்லவா அந்தச் சட்டத்தைக் காப்பதில் அக்கறை காட்டுவார்கள் அவர்கள்?

“எனவேதான், நாம் கூறுகிறோம்—‘சமூகத்திற்குச் செய்யப்பட வேண்டியவை எவை என்றாலும், அந்தச் சீர்திருத்தத்தை—மாற்றத்தை ஏற்றுக் கொள்வதற்கான அறிவை மக்களிடை பரப்ப வேண்டும்’ —என்று!

“சட்டங்கள் மக்களுக்கு அச்சத்தைத் தரக்கூடாது; சட்டம் நமது தேவைக்காக உள்ளது; ‘அதை நாம் காக்க வேண்டும்,’ என்று மக்களே எண்ணினாலன்றி சட்டங்கள், கோரிய பலனைத் தரமாட்டாதவையாகும். சமுதாயமே தனது தேவைகளை உணர்ந்து அதற்கொப்பச் சட்டங்கள் கோர வேண்டுமேயன்றி, சட்டங்கள் அதிகாரத்தின் துணை கொண்டு நிலை நிறுத்தப்படக் கூடாது.

“நமக்கு அப்படி ஒரு சமுதாயம் வேண்டாம்; அதிகாரத்தின் துணைகொண்டு சட்டம் நிலை நாட்டப்படுகிற ஒரு சமூகம் எப்படியிருக்குமென்பதற்கு ரஷ்யா ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும். இன்று ரஷ்யாவில் நிகழ்கிற அரசியல் திடீர் மாற்றங்கள் இதைத்தான் நமக்குச் சொல்கின்றன.”

மேலும் அவர், சமூக சீர்திருத்தத்தின் அவசியத்தை வலியுறுத்திவிட்டு, சமூகத்தில் உள்ள குறைபாடுகளை எடுத்தியம்பி, இந்தச் சமூகம் சீர்திருந்த தி. மு. கழகம் காட்டும் வழிதான் சிறந்ததென்பதை ஆதாரங்களுடன் விளக்கினார்.

தொடர்ந்து பேசுகையில், இன்று நடைமுறையில் உள்ள (English System of Education) ஆங்கிலமுறைக் கல்வி, பெருத்த குறைபாடுகளுடையதாக இருக்கிறதென்று பலர் கூறுவதை எடுத்துக் காட்டினார்.

“இப்போதுதான், நாட்டில், ‘கல்வி கற்க வேண்டும்; நாம்தான் படிக்கவில்லை; நமது சந்ததிக்காவது கல்விக் கண்ணைத் திறந்துவிடுவோம்,’ என்ற எண்ணம் சற்று பெருகி வருகிறது; ஒரு சமுதாயம், கல்வி அறிவு பெற்றவர்களை பெருவாரியாகக் கொண்டிருத்தல் வேண்டுமென்பது மிக முக்கியமானதும் அவசியமானதுமாகும்; அந்த நிலையில், கல்வித் தாகம் கொண்டுள்ள திராவிடர் சமுதாயம், இப்போது பெற்று வருகிற கல்விக்குக் கேடு பயக்கும் வகையில்—ஊறு செய்யும் வகையில் புதிய திட்டங்கள் அமையக் கூடாது; பொதுவாகவே கல்வி முறையில் செய்யப்படும் மாறுதல் எதுவும் வெகுவாக யோசித்துச் செய்யப்பட வேண்டியதாகும்.

“நவீன காலத்தில், மண்பானை போய், பித்தளை, அலுமினியம் என்று பொருட்கள் மாறி மாறி வருவதைப்போல, ஒவ்வொரு துறையிலும் நவீன கால மாற்றங்கள் தேவை என்பதும் உரைப்பட வேண்டியதாகும்; கால மாற்றத்திற்கொப்ப சமூகமும் தன்னை மாற்றியமைத்துக் கொள்கிற ஆற்றலையும், அறிவையும் பெற வேண்டுவது இன்றியமையாததாகும்; அந்தப் பணியினையே நாம் மேற்கொண்டுள்ளோம் என்றால் மிகையல்ல,” என்று குறிப்பிட்டார்.

சோவியத்—ஜப்பான் சமாதான ஒப்பந்தம்

ஜப்பான் நாட்டுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக, ஜப்பானிய சர்க்கார் குறிப்பிடும் எந்த ஒரு இடத்தில் வேண்டுமானாலும் பேச்சு வார்த்தைகள் நடத்தத் தயாராயிருப்பதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இரு காங்கிரஸ் கூட்டு ‘வெறும் கண்துடைப்பே!’

தி. கொ. சட்டசபை கலைக்கப்படாதது ஏன்?

கம்யூனிஸ்டு கட்சியின் நடுநிலைமையே காரணம்

“திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரசின் திரு-தமிழ்ப் பிரதேசங்களை பிரிக்க வேண்டுமென்ற அடிப்படைக் கோரிக்கையில் உடன்பாடு ஏற்பட்டால், திரு-தமிழக இணைப்புப் போராட்டத்தின் காரணமாகத் தொடரப்பட்ட வழக்குகளில் அனைவருக்கும் பொது மன்னிப்பு அளிப்பதை பொதுவாக நாம் ஆதரித்திருப்போம். அந்த ஒரு உடன்படிக்கை ஏதுமில்லாமல் காங்கிரஸ்-தி. கோ. த. நா. காங்கிரசின் கூட்டு ‘வெறும் கண் துடைப்பு வித்தையேயாகும்.

“இராஜப்பிரமுகர், பட்டம்தாணுவின் மந்திரி சபையைக் கலைத்துவிட்டு, மறு புதிய தேர்தல் நடத்தாமலிருப்பது நியாயமானதாகாது. இந்த மாநிலத்தில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சி ஏற்படுவதற்கு பி. சோ. கட்சியும், கம்யூனிஸ்டுக் கட்சியும்தான் சம அளவில் பொறுப்புள்ளவைகளாகும்.

“பட்டம் தாணுவின் அமைச்சரவை மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது கம்யூனிஸ்டுகள் நடுநிலைமை வகிக்காமல் எதிராக வோட்டுச் செய்திருந்தால் இராஜப்பிரமுகர், பட்டம் தாணுவின் யோசனையை இவ்வளவு சுலபமாக நிராகரித்திருக்கமாட்டார்.”

—இவ்வாறு, தி. கொ. புரட்சிகர சோஷலிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளரான ஸ்ரீகண்டன் நாயர் என்பவர் கூறியிருக்கிறார்.

மேலும் அவர் சொன்னார் :—

“இப்போது அமைக்கப்பட்டிருக்கிற புதிய காங்கிரஸ் மந்திரி சபை நிலையாக இருக்காது; வரவு-செலவு திட்ட விவாதக் கூட்டம் வரையில் கூட அது இருக்க முடியாது; திரு-தமிழக இணைப்புப் போர் சம்பந்தமான எதிரிகளுடைய ஆதரவுடன் தான் இம்மந்திரிசபை அமைக்கப்பட்டிருக்கிறது; இந்த எதிரிகளின் மேலுள்ள வழக்குகளை திரும்பப் பெறுவது என்ற திட்ட ஒப்பந்தனையின் பேரில் தான் தி. த. நா. கா.-வின் ஆதரவுடன் இம்மந்திரிசபை அமைந்துள்ளது.”

‘ராஜப்பிரமுகர் பதவியை ஒழித்துக் கட்டு!’

ஐதராபாத் சட்டசபையில் எதிர்க் கட்சியினர் வெளியேற்றம்

ஐதராபாத், பிப். 16—

ஐதராபாத் சட்டசபை இன்று வரவு-செலவுத் திட்டத்தைப் பரிசீலிப்பதற்காகக் கூடியது.

ராஜப்பிரமுகரான நிஜாம், தமது உரையாற்ற ஆரம்பித்ததும், எதிர்க்கட்சியினரான ஐக்கிய ஜனநாயகக் கட்சியினர் சபையை விட்டு வெளியேறினர்.

சுயேச்சை அங்கத்தினர் ஒருவர் மட்டுமே எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தார்.

ராஜப்பிரமுகர் பதவியை ஒழிக்க வேண்டும் என்ற தங்கள் கோரிக்கையை வலியுறுத்துவதற்காகவே சபையைவிட்டு தாங்கள் வெளியேறியதாக எதிர்க்கட்சித் தலைவர் தேஷ்பாண்டே கூறினார். இதற்கு முன் மூன்று முறை ராஜப்பிரமுகர் உரை நிகழ்த்துகையில் எதிர்க்கட்சியினர் வெளியேறியிருக்கின்றனர்.

250 ஆசிரியர்கள் உண்ணாவிரதம்!

சம்பள உயர்வுக் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்ததின் எதிரொலி

ஆலப்புழை, பிப் 15—

தனிப்பட்டோர் நடத்தும் செகண்டரி பள்ளிகளில் பணிபுரியும் சுமார் 250 ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றாது போய்விடவே உண்ணாவிரதம் மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. என்றாலும் அவர்கள் வேலைக்கு வந்திருந்தனர்

சென்ற வாரத்தில் கோட்டயத்தில் நடைபெற்ற அந்த ஆசிரியர்களின் மாநாடு ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படியே இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

கழகக் கூட்டங்கள்

★

பொள்ளாச்சி

மார்க்கட் ரோடு, திருவள்ளுவர் திடலில்

19—2—55 மாலை 7 மணிக்கு

தலைவர் : ம. விசயராகவன்

பேசுபவர் :

இரா. நெடுஞ்செழியன்

★

க. புதுப்பட்டி

19—2—55 மாலை 6 மணிக்கு

தலைவர் : ஆர். கே. கே. சாமி

பேசுபவர் :

க. அன்பழகன்

சொற் பயிற்சி துவக்க விழா

18—2—55 மாலை 6 மணிக்கு, வட சென்னை தியாகராயர் பகுத்தறிவு மன்ற நிலையத்தில் சொற் பயிற்சி துவக்க விழா தோழர் கி. இராசேந்திரன் தலைமையில் தோழர் ஏ. எம். முத்தையா துவக்கி வைப்பார்.

பகுத்தறிவு மன்றம்

சொற்பயிற்சிக் கூட்டம்

இராயபுரம் கவுஸ்மைதீன் தெருவில் உள்ள பகுத்தறிவு மன்றத்தில் வாராந்திரசொற் பயிற்சிக் கூட்டம் 18-2-55 வெள்ளி மாலை 6 மணிக்கு நடைபெறும். டாக்டர் எம். நாராயணசாமி தலைமையில் தோழர்கள் காஞ்சி - கல்யாணசுந்தரம், பி. தங்கராசு ஆகியோர் பேசுவர்.

தோழர் தங்கப்பழம்

20—2—55 : திருப்பூர்

21—2—55 : குனியமுத்தூர்

22—2—55 : பல்லடம்

தி. மு. கழகப் பொதுக்கூட்டங்களில் சொற்பொழிவாற்றுவார்.

நெல் விலை ஏற்றம்

கோபிசெட்டிபாளையம், பிப். 16—

கடந்த ஒரு வார காலமாக நெல் விலை வர வர ஏறிக்கொண்டே போகிறது. இங்கு மூட்டை ரூ. 12—8—0 ஆக விற்பனை செய்யப்பட்ட உதிரி சம்பா நெல் இப்போது ரூ. 16—0—0 ஆக விலை ஏறிவிட்டது. (ந.-நி.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என் அண்ணாதுரை, எம்.ஏ.